# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நாடு, நகரத் திட்டமிடல் (திருத்தம்)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

*பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரால்
2011, நவெம்பர் மாதம் 08 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2011, ஒற்றோபர் மாதம் 17 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ ***136 ஆம் சட்டமூலம்*** ]

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 006340 -650 (2011/10)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2*** : இவ்வாசகம் (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 269 ஆம் அத்தியாயமான நாடு, நகரத்திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் விரிவுப் பெயரை மாற்றீடு செய்கின்றதென்பதுடன், அதன் சட்டப்பயனானது சட்டத்தின்கீழ் செயற்படுத்தப் படக்கூடிய செயற்பாடுகளின் நோக்கெல்லையை விரிவுபடுத்துதலாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதென்பதுடன், அதன் சட்டப்பயனானது சட்டத்தின்கீழ் வெளிப்படுத்தப்படக்கூடிய வெவ்வேறு வகுதியினவான இடப்பரப்புக்களைப் பாதுகாக்கும், பேணும் நோக்கங்களுக்காக தேசிய பௌதீக பேரவையை, தேசிய பௌதீக கொள்கையையும் தேசிய பௌதீக திட்டத்தையும் தயாரிக்கும்படி தேவைப்படுத்தலாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்கின்றதென்பதுடன், அதன் சட்டப்பயனானது சட்டத்தின் நோக்கெல்லையை விரிவாக்குதலாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ, 6ஆ என்னும் பிரிவுகளை உட்புகுத்து கின்றதென்பதுடன் அதன் சட்டப்பயனானது புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சருக்கு சட்டத்தின் நியதிகளில் இடப்பரப்புக்களை ''புனித இடப்பரப்புக்களாக'' வெளிப்படுத்த தத்துவ மளிப்பதாகும்.

***வாசகம் 6*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை திருத்தம் செய்கின்றதென்பதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது சட்டமூலத்தின் 4ஆம் பிரிவினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதுமாகும்.

***வாசகம் 7*** : இவ்வாசகம் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் ஏற்பாட்டின்கீழ் அதன் திருத்தத்துக்கு முன்னர் நிறைவேற்றப்பட்ட குறித்தசில செயல்களுக்கும் வலிதுடைமையை அளிப்பதாகும்.

ச.வ.ஓ. 42/2011

## (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2011 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நாடு, நகரத் திட்டமிடல் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்துக்கான விரிவுப் பெயர் இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் விரிவுப் பெயர் இடப்படுகின்றது :- *(269 ஆம் அத்தியாயமான) விரிவுப் பெயரை மாற்றீடு செய்தல்.*

"இலங்கையிலுள்ள காணியின் பொருளாதார, சமூக, வரலாற்றுமுறையான, சூழல், பௌதீக மற்றும் மத அம்சங்கள் தொடர்பாக ஒன்றிணைக்கப்பட்ட திட்டமிடல் முறைமையொன்றை மேம்படுத்துகின்ற, பேணிக்காக்கின்ற, பேணுகின்ற மற்றும் ஒழுங்குபடுத்துகின்ற குறிக்கோள்களுடன் தேசியப் பௌதீகத் திட்டமிடற் கொள்கையொன்றை வகுத்தமைப்பதற்காகவும் செயற்படுத்துவதற்காகவும் ; குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்குப் பயன்கொடுக்கும் நோக்கத்துக்காகத் தேசியப் பௌதீகத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காகவும் ; குறிக்கோள்களுக்கு பயன்கொடுக்கும் நோக்கத்திற்காக காணி கொள்ளுதலை வசதிப்படுத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.".

**3**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :- *(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடற் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.*

2-PL 006340 -650 (2011/11)

"தேசியப் பௌதீகத் திட்டத்தைத் தயாரித்தலும், அதன் நோக்கெல்லையும், சட்டத்தின் குறிக்கோள் களும்.

2. (1) இச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட தேசியப் பௌதீகப் பேரவை, தேசியப் பௌதீகக் கொள்கையொன்றையும் தேசிய பௌதீகத் திட்டமொன்றையும் தயாரிப்பதற்கு இக்கட்டளைச் சட்டத்தின்கீழான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். இது, கீழே தரப்பட்டுள்ளவாறு சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்கொடுப்பதற்கெனச் செய்யப்பட்ட கொள்கையை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின் குறிக்கோள்கள், இலங்கையிலுள்ள காணியின் (அதன்கண் கட்டிடங்கள் இருப்பினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி), பொருளாதார, சமூக, வரலாற்றுமுறையான, சூழல், பௌதீக மற்றும் மத அம்சங்கள் தொடர்பாக முறையான உள்ளகக்கட்டமைப்பு, வாழ்வசதிகள் மற்றும் வசதிகளைப் பெறுவதற்காக ஒன்றிணைக்கப்பட்ட திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி முறைமையொன்றை மேம்படுத்துதலும், பேணிக்காத்தலும், ஒழுங்குபடுத்துதலும் என்பனவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அத்தகைய நோக்கத்துக்காக, அச்சட்டத்தின் அடுத்துப்பின்வரும் ஏற்பாடுகளுக்கிணங்கப் பின்வருவன வெளிப்படுத்தப்படலாம் :-

(அ) "பாதுகாப்பு இடப்பரப்புக்கள்" ;

(ஆ) "பேணல் இடப்பரப்புக்கள்";

(இ) "கட்டிடக்கலைசார்" அல்லது "வரலாற்றுமுறையான இடப்பரப்புக்கள்" ; அத்துடன்

(ஈ) "புனித இடப்பரப்புக்கள்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :-

"கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் "பாதுகாப்பு இடப்பரப்புக்கள்", "கட்டிடக் கலைசார்" அல்லது "வரலாற்று முறையான இடப்பரப்புக்கள்" என்பவற்றை வெளிப் படுத்துதல்.

6. அமைச்சர், ஏதேனும் மாநகர இடப்பரப்பினுள், நகர அபிவிருத்தி இடப்பரப்பினுள் அல்லது ஏதேனும் பெருவழி வீதி அபிவிருத்தி இடப்பரப்பினுள், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம், கட்டளைச் சட்டத்தின் குறிக்கோள்களுக்குப் பயன்கொடுப்பதற்காக, வரையறைக்கப்பட்ட ஏதேனும் காணி இடப்பரப்பை -

(அ) இயற்கை வாழ்வசதிகளைப் பாதுகாப்பதற்காக ஒரு "பாதுகாப்பு இடப்பரப்பாக" ;

(ஆ) இயற்கைச் சூழலைப் பேணுவதற்காகவும், சூழலினுள் இயற்கையழகு வாய்ந்த இடங்களைப் பாதுகாப்பதற்காகவும் ஒரு "பேணுதல் இடப்பரப்பாக" ; அல்லது

(இ) கட்டிடக்கலைசார், வரலாற்று முறையான பெறுமதிகொண்ட கட்டிடங்களைப் பேணுவதற்காக ஒரு "கட்டிடக் கலைசார்" அல்லது "வரலாற்று முறையான இடப்பரப்பாக"

வெளிப்படுத்தலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 6அ, 6ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன வென்பதுடன், இவை, அச்சட்டவாக்கத்தின் 6அ, 6ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :-

"கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காகப் "புனித இடப் பரப்புக்களை" வெளிப் படுத்துதல்.

6அ. புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் என்ற விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்படுகின்றதோ அவ்வமைச்சர், பௌதீகத் திட்டமிடல் என்ற விடயம் எவ்வமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அவ்வமைச்சருக்கு அறிவித்த பின்னர், ஏதேனும் நகர அபிவிருத்தி இடப்பரப்பினுள், ஏதேனும் பெருவழி வீதி அபிவிருத்தி இடப்பரப்

பினுள் அல்லது ஏதேனும் பிராந்திய அபிவிருத்தி இடப்பரப்பினுள், வர்த்தமானியில் வெளியிடப் படும் கட்டளைமூலம், கட்டளைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக வரையறுக்கப்பட்ட ஏதேனும் காணி இடப்பரப்பை, அத்தகைய இடப்பரப்பைப் பாதுகாக்கும் மற்றும் பேணும் நோக்கத்துக்காகப் ''புனித இடப்பரப்பு'' ஒன்றாகவிருப்பதாக வெளிப்படுத்துதல் வேண்டும்.

எல்லைகளின் நோக்கத்தையும் விவரணத்தையும் எடுத்துக் கூறுவதற்கான கட்டளை.

6ஆ. (1) கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின தும் 6அ என்னும் பிரிவினதும் நியதிகளின்படி ஆக்கப்பட்ட கட்டளை ஒவ்வொன்றும் அத்தகைய கட்டளை எந்த நோக்கத்துக்காக ஆக்கப்படுகின் றதோ அந்த நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக் கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடப் பரப்பின் எல்லை வரையறைக் கூறுகளின் விவரணத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(2) சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழான கட்டளையொன்று, கட்டளைச்சட்டத்தின் 6 ஆம் பிரிவினதும் 6அ என்னும் பிரிவினதும் நியதி களின்படி வெளிப்படுத்தப்பட்ட ஓர் இடப்பரப்புத் தொடர்பாக ஆக்கப்படுதல் வேண்டும்.''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது :-

"(1) மூன்றாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அமைச்சர், இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அதற்கென அவருக்குச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேல், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் பின்வரு மாறு பணிக்கலாம் :-

(அ) ஏதேனும் பிராந்திய அபிவிருத்தி இடப்பரப்புக் காகப் "பிராந்தியப் பௌதீகத் திட்டம்" ஒன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென்றும் ; அல்லது

(ஆ) ஏதேனும் நகர அபிவிருத்தி இடப்பரப்பில் அல்லது ஏதேனும் பெருவழி வீதி அபிவிருத்தி இடப்பரப்பின் ஏதேனும் பாகத்திற்காக அல்லது அதன் முழுமைக்கும் "உருவரைப் பௌதீகத் திட்டம்" ஒன்று அல்லது "விரிவான திட்டம்" ஒன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென்றும்.".

செல்லுபடியாக்குதல்.

**7**. இச்சட்டம் நடைமுறைக்கு வருவதற்குமுன்னர் எந்நேரத்திலும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஏதேனும் கட்டளை, இச்சட்டம் நடைமுறைக்கு வருவதிலிருந்து, இச்சட்டத்தின் 6அ என்னும் பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதும், ஏதேனும் வரையறுக்கப்பட்ட இடப்பரப்பைப் "புனித இடப்பரப்பு" ஒன்றாக வெளிப்படுத்துவதுமான கட்டளையாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தினதும் இச்சட்டத்தினதும் ஏற்பாடுகள் அதற்கேற்புடையற்பாலனவாதலும் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*